මගේ අංකය
எனது இல.
My No. ஓய்வூதிய அறிவுறுத்தல் கடித இல: 03/2023

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2023.04.11

அனைத்து மாவட்ட செயலாளர்கள்,
அனைத்து பிரதேச செயலாளர்கள்,

**பொது மக்கள் தினமான திங்கள் கிழமை அலுவலகத்தில் பணிபுரிதல் தொடர்பாக.**

திங்கட்கிழமை அரச அலுவலகங்களில் “பொது மக்கள் தினம்” ஆக உள்ளமையினால் அந் நாளில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வரும் பொதுமக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்துவதன் மூலம் பொது மக்களுக்களுக்கு சேவையினை வழங்குதல் அரச அலுவலர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

02. அதன் பிரகாரம், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் ஓய்வூதியத் திணைக்கள அலுவலர்கள் தமது அலுவலகங்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் பிரச்சினைகளை கவனித்தல் வேண்டும். அந் நாளில் இவ் அலுவலர்களுக்கு கடமை நிமித்த விடுமுறை அல்லது தனிப்பட்ட விடுமுறை வழங்குவதை தவிர்க்குமாறு தயவுடயன் அறியத்தருகின்றேன்.

03. ஓய்வூதிய திணைக்களத்தின் அலுவலர்கள் தங்கள் தனிப்பட்ட பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்காக தலைமை அலுவலகத்திற்கு திங்கட்கிழமை தவிர்ந்த வேறொரு கிழமை நாளில் விஜயம் செய்ய தடையேதும் இல்லையென மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஏ. ஜகத் டீ.டயஸ்
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்